செ.வெ.எண்: 22 நாள்: 09.01.2018

**புதுக்கோட்டை மாவட்டம், மலைக்குடிப்பட்டியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் விரைவில் கட்டப்படவுள்ளது – மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் கூட்டுறவுத்துறையின் சார்பில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி சேலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் (06.01.2018) அன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அன்னவாசல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு அங்காடியில் உள்ள 718 குடும்ப அட்டைதாரர்களுக்கும், வீரப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு அங்காடியில் உள்ள 439 குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலுப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு அங்காடியில் உள்ள 676 குடும்ப அட்டைதாரர்களுக்கும், மலைக்குடிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு அங்காடியில் உள்ள 729 குடும்ப அட்டைதாரர்களுக்கும், விராலிமலை செக்போஸ்டில் உள்ள அர்பன் கூட்டுறவு அங்காடியில் உள்ள 951 குடும்ப அட்டைதாரர்களுக்கும் என மொத்தம் 3513 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புகள் மற்றும் விலையில்லா வேட்டி சேலைகளை வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:

மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் அம்மா அவர்கள் பொங்கல் திருநாளை தமிழ்நாட்டு மக்கள் சிறப்பாகவும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடும் வகையில் அரிசி குடும்ப அட்டையுடைய குடும்பங்கள், காவலர் குடும்ப அட்டை பெற்றுள்ள காவலர் குடும்பங்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர் குடும்பங்கள் ஆகியோருக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, இரண்டு அடி நீளக் கரும்புத் துண்டு, 20 கிராம் முந்திரி, 20 கிராம் உலர்ந்த திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்க முதன் முதலில் உத்தரவிட்டு தொடர்ந்து வழங்கி வந்தார்கள். அதனடிப்படையில் தற்பொழுது பொங்கல் திருநாளை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி சேலை வழங்கப்பட்டுள்ளது.

அன்னவாசல் கூட்டுறவு சங்கத்தில் உள்ள நியாய விலைக்கடைக்கு புதிய கட்டடம் கட்டப்படவுள்ளதுடன், அன்னவாசல் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கும் புதிய கட்டடம் கட்டப்படவுள்ளது. மலைக்குடிப்பட்டியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில்

அரசு ஆரம்ப சுகாதார நிலையம் விரைவில் கட்டப்படவுள்ளது. மலைக்குடிப்பட்டியில் சாலை வசதி மற்றும் பள்ளி தரம் உயர்வு உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விராலிமலையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் விராலிமலை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படவுள்ளது. கொடும்பாளூரில் அரசு தொழில் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. திருச்சி மற்றும் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள விராலிமலையை முக்கிய பகுதியாக மாற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திருமதி.மிருணாளினி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தலைவர் திரு.இரா.சின்னத்தம்பி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.எஸ்.செல்லத்துரை, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மாக் குழு தலைவர்கள் திரு.சாம்பசிவம், திரு.பழனியாண்டி, முன்னாள் இலுப்பூர் பேரூராட்சித் தலைவர் திரு.குருபாபு மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**